செ.வெ.எண் : 12 நாள் : 09.02.2026

# பத்திரிக்கை செய்தி

நாகப்பட்டினம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்கு உட்பட்ட வட்டார இயக்க மேலாண்மை அலகில் கீழ்காணும் விபரப்படி வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது.

1. நாகப்பட்டினம் வட்டாரத்தில் 1 (CB-Skill) வட்டார ஒருங்கிணைப்பாளருக்கான காலிப்பணியிடம்.
2. கீழையூர் வட்டாரத்தில் 1 (CB-Skill) வட்டார ஒருங்கிணைப்பாளருக்கான காலிப்பணியிடம்.
3. வேதாரண்யம் வட்டாரத்தில் 1 (CB-Skill) வட்டார ஒருங்கிணைப்பாளருக்கான காலிப்பணியிடம்.

மேற்காணும் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு கீழ்காணும் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

1. விண்ணப்பதாரர்கள் ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்று குறைந்தபட்சம் 3மாதம் M.S Office சான்றிதழ் படிப்பை முடித்திருக்க வேண்டும்., அல்லது கணினி அறிவியல் அல்லது கணினி பயன்பாட்டில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்., 2. விண்ணப்பதாரர் 30 வயதிற்குள் இருப்பவராக இருக்க வேண்டும்., 3. குறைந்த பட்சம் 5 வருடம் SHG/PLF அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்., 4. அதே வட்டாரத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்., 5. இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்., 6. நன்னடத்தை சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்., 7. TNSRLM/ புது வாழ்வு திட்டம/IFAD திட்டங்களில் வேலை புரிந்து நிர்வாகம் மற்றும் நிதி முறைகேடு தொடர்பாக பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருக்க கூடாது.

விண்ணபதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள். 16.02.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் மகளிர் திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கட்டிடம், நாகப்பட்டினம் அலுவலகத்தில் கிடைக்கும் வகையில் விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட தேர்வு குழு மூலம் நேர்முக தேர்வு நடத்தி தகுதியான நபர் தேர்ந்தெடுக்கப்படுவார் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்.**